பாரதி செல்லம்மாள் உயில்...

(முதன்முறையாக அச்சில்)



செ.திவான்

பாரதி செல்லம்மாள் உயில் . . .

(முதன் முறையாக அச்சில்)

வரலாற்றாசிரியர்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

சுகைனா பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 75–ஆவது நூல்

பாரதி குறித்த 3–வது நூல்

முதற் பதிப்பு	:	2009 மார்ச் 1
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி
முகப்போவியம்	:	N. சங்கர், பாளையங்கோட்டை
விலை	:	ரூபாய் இருபது

காணிக்கை

மகாகவி பாரதி பிறந்த எட்டயபுரத்திற்கு அருகில் தேசபக்தச் செம்மல் வ.உ.சி. பிறந்த ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்தவர் **மாலையப்ப பிள்ளை**. இலங்கையில் பல காலம் இருந்தவர்.

மாலையப்ப பிள்ளை - **மீனாட்சி அம்மாள்** தம்பதியருக்கு 21.09.1921-இல் பிறந்தவர் **மா. கருப்பசாமி பிள்ளை** (இவரது துணைவியார் அழகுலெட்சுமி)

தந்தையின் வழியிலேயே கொழும்பிற்குச் செல்வதற்கு முன், 1935-இல் தூத்துக்குடி மேல பெரிய காட்டன் ரோட்டில் வாழ்ந்து வந்த தனது தாத்தா வ.உ.சி.யைப் போய்ப் பார்த்தார் கருப்பசாமி பிள்ளை.

"அப்பாவைப் போலவே, பேரப்பிள்ளை நீயும் திரவியம் தேடி நல்லபடியாக வாழ்க" என்று வ.உ.சி. ஆசீர்வதித்த பின்னர் கொழும்பு சென்றார். 22 வருடங்கள் கழித்து 1957-இல் தாயகம் திரும்பினார். வ.உ.சி.யை கண்ணால் கண்டவரும், அவரது ஆசியைப் பெற்றவரும் தற்போது 88 வயது நிறைந்து நம்மிடையே வாழ்ந்து வரும் பெரியவர்,



ஒட்டப்பிடாரம்

மா. கருப்பசாமிபிள்ளை அவர்களுக்கு . . .

சுகைனா பதிப்பகம்

பாளையங்கோட்டை

என்ண அலைகள்

பார் அதிர்ந்தது; மார்தட்டிய மகாகவிஞனின் கவிதை வேட்டுக்களைக் கேட்டு; அதனால்தான் என்னவோ 'பாரதி'யென்று பெயர் சூட்டி மகிழ்ந்தது.

பாரதி உயிரோடு இருந்த போதே அவரை கைவிட்டது காங்கிரஸ் என்பதனை வலியுறுத்தி 1998 ஜுனில் **'பாரதியும் காங்கிரசும்'** *எனும் நூலை வெளியிட்டேன்.*

தேசபக்தச் செம்மல் வ.உ.சி.

கப்பலோட்டிய தமிழன், அஞ்சா நெஞ்சன் வ.உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் பாரதி குறித்து எழுதிய **'வ.உ.சி. கண்ட பாரதி'** *நூலினை மறுபதிப்பு செய்து வெளியிட்டேன்.*

முதன் முறையாக அச்சில்

*என் சிந்தை கவர்ந்த தொ.மு.சி. ரகுநாதன் அவர்கள் தீட்டிய 'பாரதி காலமும் கருத்தும்' நூலில் 'கவிதையில் தெறித்த கனல்' எனும் கட்டுரையின் இறுதியில் செங்கோட்டை வீரவாஞ்சியின் சாகசச் செயலான ஆஷ் கொலை குறித்த வழக்குகளின் தடையங்கள் (எக்ஸிபிட்டுகள்) முதன்முறையாக அச்சேறுகின்றன என்று குறிப்பிட்டு மகிழ்வார்.**

வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்

அடியேனது ஆய்வில் 'முதன் முறையாக அச்சில்' என்று சொல்லத்தக்க வகையில் **'வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்'** *கட்டுரைகளைத் தேடிக் கண்டுபிடித்து அழகிய நூலாக்கினேன்; மறுபதிப்பும் செய்துள்ளேன்.***

வ.உ.சி.யின் உயில்

அகிலம் போற்றும் அற்புதத் தலைவர் 'வ.உ.சி.யின் உயிலை' முதன்முறையாக நாட்டுக்குத் தந்து **'வ.உ.சி.யின் உயில்'** *எனும் நூலாக வெளியிட்டேன்.*

---

* ரகுநாதன், பாரதி காலமும் கருத்தும், சென்னை, டிசம்பர் 82, ப. 8.

** செ. திவான், அழகும் ஆரோக்கியமும் நூல் முன்னுரையில் விரிவாக அது பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.

பாரதி செல்லம்மாளின் உயில்

தேசியக் கவிஞன் பாரதி குறித்து இதுகாறும் ஆயிரக்கணக்கான நூல்களும், கட்டுரைகளும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

மகாகவி பாரதி குறித்து இதுவரை அறியப்படாத வரலாற்றுக் குறிப்புக்களை எங்கேனும், எப்படியேனும் கண்டுபிடித்து வெளியிட வேண்டுமென்ற அவா எளியேனது உள்ளத்திலும் நிலைத்து நின்றிருந்தது. எளியேனது வாழ்வில் அந்த எண்ணம் இப்போது நிறைவேறுகிறது.

பாரதியாரின் துணைவியார் செல்லம்மாளின் உயில் பற்றிய வரலாற்றுச் செய்திகளை முதன்முறையாக நூலாக்கித் தர வாய்ப்பளித்த எல்லாம் வல்ல இறைவனுக்கும், காலத்திற்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலினை நல்ல முறையில் அச்சிட்ட சிவசக்தி ஆர்ட்ஸ், நான்சி கணினியகம், பாசமிகு தென்காசி க. நாராயணன் இராசபாளையம் நவபாரத் நாராயண ராஜா, எம்.ஏ., எம்.ஃபில்., கோவில்பட்டி அ. ஈஸ்வரன், எட்டையபுரம் காண்டீபன், சிவஞானபுரம் திரு. முருகேசன், கடையம் என். இருளப்பன், புக். மணி ஆகியோருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை

எழுதுவதற்காக வாழ்கிறேன்.

01.03.2009

பாளையங்கோட்டை

செ. திவான்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

சீவலப்பேரி கடுவாய்ச் சுப்பையர்

ஆறுகள் கூடுந்துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதித் தமிழர் கொண்டாடினர். அவற்றைக் ‘கூடல்’ என்று அழைத்தார்கள்.

இரு நதிகள் சேருமிடம் ‘கூடல்’ ஆகும். காவேரியும் பவானியும் கூடும் இடம் ‘பவானி கூடல்’ என்றாயிற்று. துங்கையும், பத்திரையும் சேர்ந்து துங்கபத்திரையென்று பெயர் பெறும் இடத்தில் அமைந்த ஊருக்குக் ‘கூடலி’ என்றாயிற்று.

சோழ நாட்டில் கெடில நதியும், உப்பனாறும் கலக்கின்ற இடத்திற்கு அருகே அமைந்த ஊர் கூடலூர். தென் ஆற்காட்டில் வெள்ளாறும், முத்தாறும் கூடுகின்ற இடம் கூடலையாற்றூர் ஆகும். மூன்று நதிகள் சேரும் இடம் முக்கூடல் என்றும் வழங்கப்பட்டது. தொண்டை நாட்டில் பாலாறும், சேயாறும், கம்பையாறும் சேருகின்ற இடத்தில் அமைந்த ஊர் திருமுக்கூடல்.

ஏரி

ஏர்த் தொழிலாகிய பயிர்த் தொழிலுக்குப் பயன்படும் தண்ணீரைத் தேக்கி வைக்கும் நிலையம் ‘ஏரி’ எனப்படும். சித்தூர் நாட்டில் பல்லவனேரியில் (பல்மனேர்) குன்று சூழ்ந்த தடாகம் உள்ளது. பாண்டிய நாட்டில் மாறனேரி; தொண்டை நாட்டில் தென்னேரி; திரையர்களால் உருவாக்கப்பட்ட திரையனேரி; கொங்கு நாட்டில் வீரபாண்டியப் பேர் ஏரி; திருச்செந்தூர் அருகே ஆறுமுகனேரி; களக்காடு பகுதியில் பத்மனாபன் ஏரி; (பதுமனேரி); கண்டியப்பேரி; அலங்காரப்பேரி; விசுவநாதப்பேரி; சீவலப்பேரி; இதில் வரும் பேரி என்பது பேரேரி என்பதன் சிதைவாகும். மன்னன் மதுராந்தகன் ஆக்கிய பேரேரி மதுராந்தகப் பேரேரி. ஆற்காட்டில் சுந்தர சோழன் கட்டிய ஏரி சோழப் பேரேரி.

கன்னட நாட்டுச் செல்வன் தாமிரபரணியில் கட்டிய கன்னடியன் அணை, நெல்லை நகர் அருகே அவன் அமைத்த கன்னடியப் பேரேரி (கண்டியப்பேரி). தண்ணீர் பெருகி நிறைந்து தெள்ளிய அலைகள் எழுந்து, அலைந்து வரும் அழகு ‘அலங்காரப்பேரி’.

ஸ்ரீவல்லபன் (சீவலமாறன்)

தென்பாண்டி நாட்டில் தாமிரவருணியும், சித்திரா நதியும், கோதண்டராம நதியும் கூடுமிடம் முக்கூடல்; ஸ்ரீவல்லபன் என்னும் (சீவலமாற) பாண்டிய மன்னன் அவ்வூரில் பேரேரி ஒன்று உண்டாக்கி சீவல்லபப்பேரேரி என்று அதற்குப் பெயரிட்டான். அப்பெயர் சிதைந்து 'சீவலப்பேரி' ஆயிற்று. இராமேச்சுவரத்திற்குத் தீர்த்த யாத்திரை செய்வோர், சீவலப்பேரி என்னும் முக்கூடலிலும் நீராடுவர்.

வீரத்தலைவர் பூலித்தேவர் – தளவாய் அரியநாதர்

வரலாற்றில் வீரத்தலைவராகச் ஜொலித்திடும் பூலித்தேவர் மரபினரின் பூலுடையார் கோயில் வழிபாட்டுத் தலம் இங்கு உள்ளது; ராமாநுஜ மடத்தின் தலைமைப்பீடம் இங்கு இருந்ததாகவும் சொல்வர்.

சமய நம்பிக்கையும், செழிப்பும் நிறைந்த சீவலப்பேரியில் தளவாய் அரியநாதர் புனித யாத்திரைக்காரர்களுக்காக கிபி. 1699-இல் தர்மசத்திரம் ஒன்றை இவ்வூரில் கட்டினார். நாள்தோறும் இந்தச் சத்திரத்தில் யாத்திரிகர்களும் இலவச உணவு வழங்கப்பட்டது.

கடுவாய்ச் சுப்பையர் (சத்திரம் சுப்பையர்)

எல்லோருக்கும் நன்கு அறிமுகமும், செல்வாக்கு மிக்கவருமான **சத்திரம் சுப்பையர்** என்ற **கடுவாய்ச் சுப்பையர்** சீவலப்பேரியில் வாழ்ந்து வந்தார். அவரது துணைவியார் பாகீரதி அம்மையார்.

குப்பம்மாள் – சின்னச்சாமி

சுப்பையர் - பாகீரதி தம்பதியருக்கு **'குப்பம்மாள்'** என்ற பெண் குழந்தை பிறந்தது. அதன்பின் ஆறு ஆண்டுகள் கழித்து பிறந்த ஆண் குழந்தை **சின்னச்சாமி. 'சுந்தரராஜன்'** என்று அது செல்லமாகவும் அழைக்கப்பட்டது.

கிருஷ்ணசிவன்

தூத்துக்குடி அருகேயுள்ள வாகைக்குளத்தைச் சேர்ந்த **கிருஷ்ணசிவன்** என்பவருக்கு குப்பம்மாள் குழந்தைத் திருமணம் செய்து வைக்கப்பட்டார். திடீரெனக் கடுவாய்ச் சுப்பையர் காலமானார்.

எட்டையபுரம் – பாகீரதி அம்மாள்

'இளசை' என்று இலக்கியங்களில் குறிக்கப் பெற்று வரலாற்றில் பேசப்படுகின்ற ஊர் எட்டையபுரம்.

தனது மகன் சிறுவன் சின்னச்சாமியை அழைத்துக் கொண்டு எட்டயபுரத்திற்கு குடிபுகுந்தார் பாகீரதி அம்மாள்.

பாகீரதி அம்மாளுக்கு அவரது உறவினர்களும் மற்றவர்களும் உதவி செய்தனர்.

சின்னச்சாமி – கிராம முன்சீபு ராமசாமி

சின்னச்சாமியின் பள்ளிப்படிப்பு எட்டயபுரத்தில் தொடர்ந்தது. சின்னச்சாமி கல்வி கற்பதில், சிறப்பான இடத்திற்கு வந்தார். தேர்ந்த ஆங்கில ஞானமும் இருந்ததால், எட்டயபுரம் ஜமீனில் அவருக்கு வேலை கிடைத்தது.

சின்னச்சாமியின் தாய்மாமன் உறவு கொண்டவர் ராமசாமி. எட்டயபுரத்தில் கோவிலுக்குத் தென்புறமுத்த வீதியில் மாடி வீட்டில் வசித்து வந்தார். அவரது மகள் லட்சுமி. சின்னச்சாமி - லட்சுமி திருமணம் நடைபெற்றது.

பாரதி பிறந்தார் – சுப்பையா

*1882 டிசம்பர் 11, எட்டையபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும், லட்சுமி அம்மாளுக்கும் மகனாக சுப்பிரமணியன் (பாரதி) பிறந்தார். செல்லப்பெயராக தனது தாத்தா சுப்பைய்யர் பெயரால் '**சுப்பையா**' என்றும் அழைக்கப்பட்டார்.*

சில ஆண்டுகளில் லட்சுமி அம்மையார் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். அதற்கு பாட்டியின் பெயரான பாகீரதி என்று பெயர் சூட்டப்பட்டது.

லெட்சுமி அம்மாள் – வள்ளியம்மாள்

1887-இல் பாரதியாரின் தாயார் லெட்சுமி அம்மாள் மறைந்தார். பாரதி, பாகீரதி என்ற இரு பிள்ளைகளை வளர்ப்பதை உத்தேசித்து சின்னச்சாமி மறுமணம் செய்தார்.

1889-இல் சின்னச்சாமி வள்ளியம்மாள் என்பவரை மறுமணம் செய்து கொண்டார். பாரதிக்கு குலமரபுப்படி உபநயனத்தையும் தம் திருமண நாளன்றே சின்னச்சாமி சிறப்பாக நடத்தி முடித்தார்.

பாரதி தன் தாய் வழிப்பாட்டனாரான ராமசாமி அய்யர் வீட்டிலும், தனது வீட்டிலும் வளர்ந்தார். பாரதியின் பாட்டி பாகீரதி அம்மாளும், பாரதியை நன்கு வளர்த்து வந்தார். பாரதியின் தங்கை பாகீரதி இளமையிலேயே மறைந்தார்.

தாய் மாமன்மார் – சிற்றன்னைகள்

பாரதியின் தாய்மாமன்மார் இருவர்; பாரதியைவிட மூன்று வயது மூத்தவரான சாம்பசிவ அய்யர்; மற்றொருவர் செல்லம் அய்யர்.

பாரதியின் தாயார் லெட்சுமி அம்மாளுடன் பிறந்தவர்கள் ஏழு பேர். நான்கு பெண்கள், மூன்று ஆண் பிள்ளைகள். சின்னம்மாள், ஆனந்தம், விசாலாட்சி, ராமு ஆகிய நான்கு சிற்றன்னைகளும் பாரதிக்கு இருந்தனர்.

எட்டயபுரம் காட்டன் ஜின் பாக்டரி லிமிடெட்

1892 பிப்ரவரி 6-இல் கம்பெனியின் நிர்வாகச் செயலாளராக இருந்து பாரதியின் தந்தை சின்னச்சாமி அய்யர் Etayapuram Cotton Gin Factory (Limited) என்ற பெயரில் தொழில் துவங்கினார். கம்பெனியில் இயக்குநர்களாக, A.S. அப்பாசாமி, காந்தி தத்துப் பாண்டியாஜியார் (குசராத்தைச் சேர்ந்தவர்) கவிராஜ ஈஸ்வரமூர்த்தியாபிள்ளை, T. சபாபதி பிள்ளை, நெல்லையப்பபிள்ளை, S.G. முத்துசாமி ஐயர் ஆகியோர் இருந்தனர். E.R. கிருஷ்ண ஐயங்கார் கம்பெனியின் ஆடிட்டர். ஆரம்ப காலத்தில் கம்பெனி வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்றன. தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் 1892 டிசம்பர் வரை தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்கவில்லை.

பாரதி

கி.பி. 1892-இல் விருதை சிவஞான யோகிகள் சுப்பிரமணியனின் கவிபாடும் திறனைக் கண்டு 'பாரதி' எனும் பட்டத்தை வழங்கினார். அன்று முதல் சுப்பிரமணியன் 'பாரதி'யானார்.

1894 – 1895 – 1896 டிசம்பர் 20

1894 ஆவணி மாதத்தில் பாரதியின் சிற்றன்னை வள்ளியம்மைக்குப் பெண் குழந்தை பிறந்தது. லெட்சுமி என்று பாரதியின் தாயார் பெயரே அக்குழந்தைக்கு சூட்டப்பட்டது.

காட்டன் ஜின் பாக்டரி செயற்படவில்லை. தொழில் முயற்சியில் ஏமாற்றம் தாங்க முடியாத கடன் சுமை சின்னச்சாமி ஐயர் கை முதல் இழப்பு - வறுமைக்குள்ளாகுதல் பாரதியின் தந்தையின் ஆலைத்தொழில் ஆங்கிலேயர்களால் சின்னாபின்னமாக்கப்பட்டது.

ஓங்கி நின்ற பெருஞ்செல்வம் யாவையும்
ஊணர் செய்த சதியிலிழந்தனன்*

என்று தனது தந்தை வறுமை எய்தியது பற்றி பாரதியே பின்னாளில் குறிப்பிட்டுள்ளார். 1895-இல் பாரதி திருநெல்வேலி இந்துக் கல்லூரி என்ற பெயரால் வழங்கும் ஆங்கிலோ வெர்னாகுலர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்.

பாரதியின் சிற்றன்னை வள்ளியம்மாளுக்கு ஆண் குழந்தை பிறந்தது; குழந்தைக்கு விசுவநாதன் என்ற பெயர் இடப்பட்டது.

1897 ஜனவரி 24 – 1897 ஜூன் 27

தனது பள்ளிப் படிப்பைத் தொடர பாரதி எட்டயபுரம் ஜமீன்தார் ஜெகவீரராமகுமார வெங்கடேசுர எட்டப்பருக்கு பண உதவி கோரி '**ஊழியன் இளசைச் சுப்பிரமணியன்**' என்ற பெயரில் பாடல் வடிவில் கடிதம் எழுதினார். பாரதி பிறந்து 14 வருடம் 6 மாதம் 16-ஆம் நாள் ஆகியிருந்தது. அப்போது பாரதி ஐந்தாம் படிவம் (Vth Form) படித்துக் கொண்டிருந்தார்.

செல்லப்பா ஐயர் – மூன்று திருமணங்கள்

பாரதிக்கு மணமகளாக வந்த பெண்ணரசி செல்லம்மாளுக்கு வயது ஏழு.

கடையம் அப்பாசாமி சிவன் புதல்வர் செல்லப்பா ஐயர். இவருக்கு ஏழு குழந்தைகள். ஐந்து பெண் மக்கள்; இரண்டு ஆண் மக்கள். ஐந்து பெண்களில் மூன்றாவது பெண் **செல்லம்மாள்.** கடையத்தைச் சேர்ந்த செல்லப்பா ஐயரின் மகளான செல்லம்மாளைப் பாரதி 1897 ஜூன் 27-இல் திருமணம் செய்து கொண்டார். செல்லம்மாளின் கடைசித் தங்கை சொர்ணம்மாள்.

பாரதியின் திருமணம் நடந்த அன்றே மேலும் இரு திருமணங்கள் நடைபெற்றது. செல்லப்பா ஐயரின் இரண்டாவது

---

* டி.வி.எஸ்.மணி, சீனி. விசுவநாதன், பாரதியார் கவிதைகள், 1992, ப. 237.

புதல்வி பத்து வயது நிரம்பிய **பார்வதிக்கும்**, காசிவாசியும், பாரதியின் அருமை அத்தையாருமான குப்பம்மாளின் மூத்தமகன் பதினாறு வயது நிரம்பிய **விசுவநாதனுக்கும்** திருமணம் நடைபெற்றது.

பாரதியின் தங்கை லட்சுமி

பாரதியின் தங்கை மூன்றரை வயதுடைய **லட்சுமிக்கும்**, பாரதியின் அத்தை குப்பம்மாளின் இளைய மகன் 11 வயதுடைய **கேதாரத்துக்கும்** திருமணம் நடந்தேறியது. திருமணம் முடிந்ததும் பாரதி தனது படிப்பிற்காக திருநெல்வேலி சென்று விட்டார்.

1898 ஜுலை 20

பாரதியின் தந்தை சின்னச்சாமி ஐயர் மரணமடைந்தார். பாரதிக்கு வயது 15 முடிந்து 16 பிறந்திருந்தது. பாரதியின் சிற்றன்னையின் மகன் விசுவநாதனுக்கு வயது இரண்டு. இருவருமே மைனர் குழந்தைகள். தன் மகனைப் பறி கொடுத்த பாகீரதி அம்மாள் பேரக் குழந்தைகளின் கார்டியன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். பாரதியின் படிப்பும் தடைபட்டு விடக்கூடாது. ஜீவனமும் நடந்தாக வேண்டும். எனவே சொத்து என்று சொல்லிக் கொள்ள இருந்த வீட்டை அடமானம் வைத்தார்.

பாகீரதி அம்மையார் தந்த அடமானம்

பாகீரதி அம்மைக்கு ஏற்கெனவே சில சில்லறைக் கடன்களும் இருந்தன. அந்தக் கடன்களையும் அவர் தீர்க்க விரும்பினார். ஆக, சில்லறைக் கடன்களைத் தீர்க்கவும், இதர செலவுகளுக்காகவும், பாரதியின் படிப்புச் செலவுக்காகவும் வீட்டின் பேரில் அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்து இருநூறு ரூபாய் கடன் வாங்கினார் அம்மையார்.

மாதம் ஒன்றுக்கு ரூபாய் நூற்றுக்கு ஒரு ரூபாய் வட்டி வீதம் செலுத்தவும் அவர் உடன்பட்டார். அம்மையார் எழுதிக் கொடுத்த பத்திரத்தின் விவரம் வருமாறு:

"1898-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 28-ம் தேதிக்கு - தமிழ் 1704-ம் வருஷம் ஆவணி மாசம் 14-ந் தேதி - அம்பாசமுத்திரம் தாலுகாவைச் சேர்ந்த மங்கலம் கிராமத்தில் இருக்கும் சேஷ அய்யர் குமாரன் ஜாதி பிராமணாள் விவசாய ஜீவனம் 28 வயதுள்ள லஷ்மண அய்யர் அவர்களுக்கு ஒட்டப்பிடாரம் தாலுகா

எட்டயபுரத்தில் இருக்கும் சின்னச்சாமி அய்யர் குமாரன் மேற்படி ஜாதி சுக ஜீவனம் 15 வயதுள்ள சுப்பையா (பாரதி), மைனர் (1), மேற்படியான் தம்பி 2 வயதுள்ள மைனர் விசுவநாதன் (2) - இவர்களுக்குக் கார்டியனும், பிதாமஹியுமான பாகீரதி அம்மாள் எழுதிக் கொடுத்த அடமானக் கடன் பத்திரம் என்னவென்றால், தபசில் கண்ட சொத்துக்களை அடமானம் செய்து கொடுத்து, தங்களிடம் நான் வாங்கிக் கொண்டது ரூபாய் 200.

மேற்படி ரூபாய் 200-க்கும் மாதம் 1-க்கு 100-க்கு 1 வீதம் வட்டி சகிதம் கூடிய வட்டியும் முதலையும் வரும் ஆண்டு வைகாசி மாதம் 30-ம் தேதியில் எருகாம் கொடுத்து, இந்தப் பத்திரத்தை மீட்டிக் கொள்வேனாகவும் தவறினால், அதுவரை கூடிய அசல் வட்டித் தொகைக்கு ரூ.100-க்கு 1 வட்டி வீதம் பன்னிரண்டு மாசத்துக்கு ஒரு தரம் வட்டிக்கு வட்டி சேர்த்து அடமான சொத்தின் பேரில் வசூல் செய்து கொள்வீர்களாவது:

பணப்பற்று விவரம்:

என்னுடைய மகன் சீக்காயிருந்தபோது நேரிட்ட சிலவு வகைக்கும் மேற்படியான் இறந்துபோன சிலவு வகைக்கும் ரூ.100 மேற்கண்ட மைனர்கள் சாப்பாட்டு வகைக்கும், அதில் மூத்த மைனர் படிப்பு வகைக்கும் ரூ.100 ஆக ரூ.200-ம் தங்கள் ஷட்டகர் எட்டயபுரத்தில் இருக்கும் கை. விசுவநாத அய்யர் மூலமாய் பற்று சரி.*

இந்தப் பத்திரத்தில் சாட்சியாகக் கையெழுத்திட்டவர் - வேறு யாரும் இல்லை - அப்போதும் எட்டயபுரத்தில் கிராம முனிசீபாகப் பணியாற்றி வந்த பாரதியின் தாய்வழிப் பாட்டனார் ராமசாமி ஐயர்தான்!

இந்த நிலையில், காசியில் குடியேறி இருந்த குப்பம்மாள் - பாரதியின் அத்தை - சின்னச்சாமியின் சகோதரன் - குடும்ப நிலையை உத்தேசித்து ஏதேனும் உதவி செய்ய எண்ணினார். அதனால், பாரதியைத் தான் காசிக்கு அழைத்துக் கொள்வது என்று தீர்மானித்தாள்.

குப்பம்மாளின் தீர்மானத்தைப் பலரும் ஏற்றனர். பாகீரதி அம்மைக்கு இந்த ஏற்பாடு ஒரு வகையில் நிம்மதியை அளித்தது.

---

* பத்திரம் கோவில்பட்டி சப்–ரிஜிஸ்தரார் ஆபீசில் 1898–ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 29–ஆம் தேதி பகல் 1.55 மணிக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதனால், தன் பேரப்பிள்ளையைத் தன் மகளின் பராமரிப்பில் ஒப்புக் கொடுத்தனள். பாரதியும் மறுவார்த்தை பேசாமல் காசி செல்வதற்கு உடன்பட்டார். பாரதி தம் பாட்டி பாகீரதியுடன் காசிக்குப் புறப்பட்டுச் சென்றார்; தம் மனைவியை அவர் தம்முடன் அழைத்துச் செல்லவில்லை. பாரதி காசி புறப்படும் முன் தம் மனைவி செல்லம்மாளைக் கடையத்தில் விடுத்துச் சென்றார். செல்லம்மாள் தம் தந்தை வீட்டில் வாசம் செய்யலானார்.* பாரதியாரின் சிறிய தாயார் வள்ளியம்மை தம் மகன் விசுவநாதனுடன் தம்முடைய தாயார் இல்லத்தைப் புகலிடமாக்கிக் கொண்டார்.

1898

1898 பிற்பகுதி முதல் பாரதியின் காசிவாசம் ஆரம்பமாயிற்று. ஜெய் நாராயண கலாசாலை ஆங்கிலப் பள்ளியில் பாரதி படிப்பைத் தொடர்ந்தார். இந்தி - சமஸ்கிருதம் கற்றார். 1900-ஆம் ஆண்டில் அலகாபாத் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மத்திய இந்துக் கல்லூரியின் பிரவேசப் பரீட்சைக்கு அமர்ந்து அதில் முதல் வகுப்பில் தேறினார். (Allahabad University Entrance Examination) பாரதி வாழ்வில் காசி வாழ்க்கை பலவித மாற்றங்களைத் தந்தது. எட்டயபுரத்து பண்டித நடையும் மனப்பான்மையும் நீங்கியது. பரந்த தேசியப் பார்வை பெற்றார் பாரதி. முகத்தில் முறுக்கிவிட்ட மீசை, தலையில் வால்விட்ட தலைப்பாகை, இடையில் பஞ்சகச்சம், மேலே கறுப்புக் கோட்டு.

வெடிகுண்டு வீசும் பயங்கர இயக்கத்தில் பாரதி

பாரதியாரது போக்கும் நடையுடை மாற்றங்களும், தேசியப்பற்றும் அவரது உறவினர்களுக்கு விதவிதமான பயங்களை உண்டாக்கியது. செல்லம்மாளின் தமக்கை பார்வதியின் கணவரான விசுவநாதன் கடையம் சென்றிருந்த சமயம், காசியில் இருந்த பாரதியின் சுதேச சிந்தனைகளைப் பற்றி கடையத்தில் இருந்த செல்லம்மாளிடம், வெடிகுண்டு வீசும் பயங்கர இயக்கத்தில் பாரதி சேர்ந்துவிட்டது போலும், அவருக்குத் தூக்குத் தண்டனையோ தீவாந்தர சிட்சையோ தான் (அந்தமான் சிறைவாசம்) கிடைக்குமெனவும் பயமுறுத்தி விட்டார். 12 வயதுள்ள செல்லம்மாள் உங்களுக்கு என் மேல் அன்பிருந்தால்

** சீனி. விசுவநாதன், மகாகவி பாரதி வரலாறு, சென்னை, 1996, ப. 92. 93.

புறப்பட்டு வந்துவிடுங்கள்' என்று கடிதம் எழுதினார். அதற்கு பாரதி எழுதிய பதில் கடிதம் இதோ.

இளம் மனைவிக்குக் கணவர் பாரதி கடிதம், 1901

ஓம்.

ஸ்ரீ காசி, ஹநுமந்த கட்டம்

எனதருமைக் காதலி செல்லம்மாளுக்கு ஆசீர்வாதம். உன் அன்பான கடிதம் கிடைத்தது. நீ என் காரியங்களில் இத்தனை பயப்படும்படியாக நான் ஒன்றும் செய்யவில்லை. விசுவநாதன் அனாவசியமாக உனக்குப் பயத்தை விளைவித்திருக்கிறான். நான் எப்போதுமே தவறான வழியில் நடப்பவனல்ல. இதைப் பற்றி உன்னைச் சந்திக்கும் சமயங்களில் விவரமாகக் கூறுகிறேன். நீ இந்த **மாதிரி கவலைப்படும் நேரங்களில் தமிழை நன்றாகப் படித்து வந்தாயானால் மிகவும் சந்தோஷமுறுவேன்.**

உனதன்பன்

சி. சுப்பிரமணிய பாரதி*

1903 ஜனவரி

இங்கிலாந்தில் விக்டோரியா மகாராணியார் இறந்தவுடன் தில்லியில் 1903 ஜனவரியில் தர்பார் ஒன்றுக்கு கர்சன் பிரபு ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தத் தர்பாருக்கு சுதேச மன்னர்களும் ஜமீன்தார்களும் சென்றிருந்தார்கள். டில்லியில் தர்பார் முடிந்து ஊர் திரும்பும் வழியில் எட்டயபுரம் ஜமீந்தார் காசிக்கு வந்தார்; சிவமடத்தில் தங்கினார்; பாரதியைச் சந்தித்தார்; பாரதியைத் திரும்பவும் அழைத்தார்; பாரதி 1903-ஆம் ஆண்டின் முற்பகுதியில் எட்டயபுரம் திரும்பினார்.

01.03.1903

பாரதிக்கும், செல்லம்மாளுக்கும் குல ஆசாரப்படி 01.03.1903-இல் சாந்திக் கல்யாணம் கடையத்தில் நடைபெற்றது. பின்னர் செல்லம்மாளுடன் எட்டயபுரம் சென்றார். பிறந்த மண்ணில் புது வாழ்வை மீண்டும் தொடங்கினார்.

---

* ரா.அ. பத்மநாபன், பாரதியின் கடிதங்கள், சென்னை, 1981, ப. 15.

1903 – 1904

எட்டயபுரம் ஜமீனில் வேலை பார்த்தார் பாரதியார். காலையில் ஜமீன்தாருக்குப் பத்திரிகைகள், புத்தகங்கள் படித்துக் காட்டுவது, நாட்டு நடப்புகளைச் சொல்வது, வித்வான்கள் செய்கிற வாதப் பிரதிவாதங்களில் பங்கேற்பது இவைதாம் பாரதியின் அன்றாடப் பணிகள்.* காலப்போக்கில் அரண்மனைப் பணிமுறைகளில் வெறுப்பு; பாரதி சமஸ்தானப் பணியிலிருந்து விலகினார்; எட்டயபுரத்திலிருந்தும் வெளியேறினார்.

01.08.1904 – 10.11.1904

மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் 1904 ஆகஸ்ட் முதல் நாள் முதல், நவம்பர் பத்தாம் நாள் வரை தமிழாசிரியராகப் பணிபுரிந்தார் பாரதி. அதன்பின் அரசியலில் தீவிரப் பிரவேசம் நடைபெற்றது.

1904 – 1908

1905 ஜனவரியில் கடையத்தில் பாரதியின் மூத்தமகள் தங்கம்மாள் பிறந்தாள். பாரதியார் உயிருடன் இருந்தபோதே இவருக்குத் திருமணம் நடைபெற்றது. வ.உ.சி., சுப்பிரமணிய சிவா - பாலகங்காதர திலகர், சுதேசமித்திரன் ஜி. சுப்பிரமணிய ஐயர் என தலைவர்களின் தொடர்பால், உறவால், பாரதியின் அரசியல் எழுச்சி தொடர்ந்தது.

26.08.1908

வ.உ.சி.யின் சிறைவாசத்தைத் தொடர்ந்து, தனது மனைவி செல்லம்மாளை கடையத்தில் விட்டு விட்டு, பாரதி சென்னை திரும்பினார். 1908 செப்டம்பர் முற்பகுதி புதுச்சேரிக்கு சென்றார்.

11.03.1909

பாரதியின் இளையமகள் சகுந்தலா பிறந்தார்.

வ.வே.சு. அய்யர் – 1910

1910 அக்டோபரில் வ.வே.சு. அய்யர் புதுச்சேரி வந்தடைந்தார்.

---

* சீனி. விசுவநாதன், பாரதி இயல் அறியப்பட வேண்டிய உண்மைகள், சென்னை, 2004, ப. 175.

ஆஷ் கொலை – 1911

1911 ஜூன் 17, மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் திருநெல்வேலி ஜில்லா ஆக்டிங் கலெக்டர் ஆஷ், வீரவாஞ்சியால் கொலை செய்யப்பட்டார்.

பாரதி – வ.உ.சி. சந்திப்பு 1912

1912 டிசம்பர் இறுதியில் புதுச்சேரியில் பாரதியை வ.உ.சி. சந்தித்தார். புதுச்சேரியிலேயே பாரதி வாழ்ந்து வந்தார்.

20.11.1918

புதுவையை விட்டுக் கிளம்பி, பிரிட்டிஷ் எல்லைக்குள் காலடி வைத்த பாரதி கடலூரில் கைது செய்யப்பட்டார்.

14.12.1918

ஆங்கிலேய அரசு விதித்த நிபந்தனைகளைப் பாரதி ஏற்றுக் கொண்டு 14.12.1918-இல் விடுதலையானார்.

15.12.1918

தனது மனைவி செல்லம்மாளின் ஊரான கடையத்திற்குப் பாரதி வந்து சேர்ந்தார்.

கடையம்

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் அமைந்துள்ள அழகிய ஊர் கடையம். கடையத்திற்கு அருகில் தோரணமலைப் பகுதியில் பழங்காலத் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

'பாண்டிக் கோவை' குறிப்பிடும் 'கடையல்' தான் கடையம் என்பர் இவ்வூரை சேரர்களும், பாண்டியர்களும் ஆட்சி புரிந்துள்ளனர்.

வளசை – சென்ன வீரய்யா

'கோனாடு விக்கிரம பாண்டிய நல்லூர்' என்று கடையத்தை சுந்தரபாண்டியனின் 18-வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு குறிப்பிடுகிறது. கடையத்திற்கு 'வளசை' என்ற பெயரும் உண்டு. அழகிய திருச்சிற்றம்பல கவிராயர் எழுதிய 'வளசை அந்தாதி' கடையத்தைப் பற்றிக் கூறுகின்ற அருமையான நூல்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரின் குருவான சென்ன வீரய்யா கடையத்தில் வாழ்ந்தவர் ஆவர். இவரது சமாதி பத்திரப் பதிவுத்துறை அலுவலகத்தின் கீழ்புறத்தில் உள்ளது.

ஜீசேசாய் சுவாமிகள்

*சுப்பையா தீட்சிதரின் வழியில் வந்தவரும், வடமொழியில் வில்வவனநாதர் திருக்கோயிலின் தலப்புராணத்தைப் பாடியவருமான ஸ்ரீசேசாய் சுவாமிகள் கடையம் அக்கிரஹாரத்தில் பிறந்தவர். இங்கு பிறந்த சிவானந்த தீர்த்தசாமிகள் கி.பி. 1891-இல் சிதம்பரம் திருக்கோயிலுக்கு டாக்டர் ராஜா. சர். அண்ணாமலை செட்டியார் துணையுடன் கும்பாபிசேகம் நடத்தியவர் என்பர்.**

கல்யாணி அம்மன் திருக்கோயில்

பழங்காலத்தில் புகழ்பெற்ற கடையம் பிற்கால நாயக்கர்கள் காலத்திலும் புகழ்பெற்று விளங்கியது. கடையத்தில் வில்வவனநாதர் திருக்கோயில், கல்யாணி அம்மன் திருக்கோயில், பத்திரகாளியம்மன் திருக்கோயில், முப்புடாதி அம்மன் திருக்கோயில்கள் உள்ளன. (கல்யாணி அம்மன் கோயிலுக்கு வெளியே வழங்கப்பட்ட திருவாதிரை களியையும், பொங்கலையும் ஒடுக்கப்பட்ட மக்களோடு வெளியே நின்று கையேந்தி வாங்கியவர் பாரதி.)

இயற்கை வளம்

மேற்கு மலைத் தொடரின் அருகில் உள்ள கடையத்தின் பகுதியில் ராமநதி, ஜம்புநதி தவழ்ந்து செல்கின்றன. பசுமையான வயல்கள், பனை, தென்னைகள், மா, பலா, எலுமிச்சை இன்ன பிற இயற்கை வளங்கள் நிறைந்த கடையத்தில் குடியேறினார் மகாகவி பாரதி.

17.12.1918

15.12.1918-இல் கடையத்திற்கு வந்த பாரதி தனது மைத்துனர் கே.ஆர். அப்பாத்துரை வீட்டில் தங்கினார் (கே.ஆர். அப்பாத்துரை தபால் இலாகாவில் பணிபுரிந்தவர். பாரதி மீது மிக்க ஈடுபாடு கொண்டவர். தமது சுதந்திர ஆவலினால் வேலையிலிருந்து நீக்கப் பெற்றவர். புதுவையிலிருந்து வெளியேற்றி பாரதியை கடையம்

---

* ச. கணபதிராமன், கடையத்தில் உதிர்ந்த பாரதியின் படையல்கள், ஆழ்வார்குறிச்சி, 2004, ப. 6.

கொண்டு வந்து சேர்த்தவர் இவர். பாரதி இறந்தவுடன் பாரதி பாடல்கள் நூல்கள் சிலவற்றை செல்லம்மாளுடன் சேர்ந்து பின்னாளில் கொண்டு வந்து, நூல்கள் விற்பனையாகாததால் அப்பணியை விட்டார்; 1940-இல் மறைந்தார்)

15.12.1918 இரவில் கடையம் வந்து சேர்ந்த பாரதி 17.12.1918-இல் சுதேசமித்திரன் ஆசிரியருக்கு எழுதிய கடிதம் இதோ . . .

மித்திரன் ஆசிரியருக்குக் கடிதம்

கடயம்

டிசம்பர் 17.1918

ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்காருக்கு நமஸ்காரம். ஞாயிற்றுக்கிழமை (15-ஆம் தேதி) இரவு நான் இவ்வூருக்கு வந்து சேர்ந்தேன். என் விடுதலையின் பொருட்டாகத் தாங்களும் மற்ற நண்பர்களும் மிகவும் சிரத்தையுடன் பாடுபட்டதற்கு என் மனப்பூர்வமான நன்றி தெரிவிக்கிறேன்.

ஸ்ரீமதி அன்னிபெஸண்ட், ஸ்ரீமணி அய்யர், ஸ்ரீ.சி.வி. ராமசாமி அய்யர்! முதலாக என் விடுதலை விஷயத்தில் சிரத்தையெடுத்துக் கொண்ட தங்களுடைய மித்திரர்களுக்கெல்லாம் எனது நன்றி தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

சி. சுப்பிரமணிய பாரதி

21.12.1918

பாரதியின் நெருங்கிய நண்பர் பரலி சு. நெல்லையப்பருக்கு பாரதி எழுதிய கடிதம் இதோ . . .

பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம்

ஓம் சக்தி

கடையம்

21 டிசம்பர் 1918

ஸ்ரீமான் நெல்லையப்பபிள்ளைக்கு நமஸ்காரம். நான் ஸௌக்கியமாகக் கடையத்துக்கு வந்து சேர்ந்தேன். இவ்வூருக்கு நான் வந்த மறுநாள் பாப்பா பாட்டு முரசு, நாட்டுப் பாட்டு, கண்ணன் பாட்டு இவை வேண்டுமென்று பலரிடமிருந்து கடிதங்கள் கிடைத்தன.

என்வசம் மேற்படி புஸ்தகங்கள் இல்லை. உன்னிடம் மேற்படி புஸ்தகங்களிலிருந்தால் அனுப்பும்படிப் ப்ராத்திக்கிறேன். ‘பாஞ்சாலி சபதம்’ இரண்டு பாகங்களையும் சேர்த்து ஒன்றாக அச்சடிப்பதற்குரிய ஏற்பாடு எதுவரை நடந்திருக்கிறதென்ற விஷயம் தெரியவில்லை. இனிமேல் சிறிது காலம்வரை நான் ப்ரசுரம் செய்யும் புஸ்தகங்களை போலீஸ் டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் காட்டி அவருடைய அனுமதி பெற்றுக் கொண்ட பிறகே ப்ரசுரம் செய்வதாக ராஜாங்கத்தாருக்கு நான் ஒப்பந்தமெழுதிக் கொடுத்திருக்கிறேன்.

ஏற்கனவே பாஞ்சாலிசபதம் (முதற் பாகம்) வெளியிட்டிருக்கிறபடியாலும், ப்ரசுரம் செய்பவன் நானன்றி நீயாதலாலும் இதை அச்சிடுமுன் மேற்படி ஒப்பந்த விதியை அனுசரித்தல் அவசியமில்லையென்ற தோன்றுகிறது.

அப்படியே காண்பித்ததாலும் தவறில்லை. நமது நூல் மாசற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் ஹானிங்டன் எனக்கு மிகவும் அன்புள்ள ஸ்நேஹிதர். தங்கமான மனுஷயன். ஆதலால், அநாவசியமான ஆக்ஷேபங்களை கற்பித்து நமது கார்யத்தைத் தடைசெய்யக் கூடியவரல்லர். நீயே மேற்படி நூலை அவரிடங்காட்டி அனுமதி பெற்றுக் கொள்க.

பாப்பா பாட்டு முதலியன உன்னிடம் இல்லாவிட்டால் உடனே அவற்றை மீண்டும் ப்ரசுரம் செய்தல் மிகவும் அவஸரம்.

இவை முதலிய எல்லா விஷயங்களைப் பற்றி உன்னிடம் நேரே பேச விரும்புகிறேன்.

இதன் பொருட்டாக இக்கடிதம் கண்டவுடன் இங்கு நீ நேரே புறப்பட்டு வந்து சேரும்படி வேண்டுகிறேன். ஸ்ரீமான் - குவளை - கிருஷ்ணய்யங்கார் முதலிய நம்முடைய நண்பர்களுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன். இன்னும் ப்ரசுரம் செய்ய வேண்டிய நூல்கள் என்னிடம் பல இருக்கின்றன. நான் இப்போது ப்ரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்துவிட்டபடியால் நமது ப்ரசுரங்களுக்குப் பணம் கொடுக்கக்கூடிய நண்பர்களும் பலர் இருக்கிறார்கள். உன்னை ஸஹாய புருஷனாகக் கொண்டால் ப்ரசுர காரியம் தீவிரமாகவும் செம்மையாகவும் நடைபெறும் மென்று தோன்றுகிறது.

எதற்கும், நீ உடனே புறப்பட்டு இங்கு வந்து சேரும்படி ப்ரார்த்திக்கிறேன். உனக்கு மஹாசக்தி அமரத்தன்மை தருக.

உனதன்புள்ள,

சி. சுப்பிரமணிய பாரதி

30.01.1919

1918 டிசம்பர் 15 இரவில் கடையம் வந்த பாரதி 1919 ஜனவரி 30-இல் கடையத்தில் வேறு வீட்டுக்கு குடிபுகுந்தான். இதோ பாரதியின் கடிதம்.

எட்டயபுரம் வெங்கடேஸ்வர ரெட்டுவிற்கு கடிதம்

ஓம் சக்தி

கடையம்

30 ஜனவரி 1919

ஸ்ரீமான் வெங்கடேசரெட்டுவுக்கு நமஸ்காரம்.

இந்த ஊரில் ஒரு வீடு மூன்று வருஷத்துக்கு வாடகைக்கு வாங்கியிருந்தேன். அதைச் செப்பனிடுவதற்கு அவசியமான தொகை நம் கையிலிருந்து செலவிட்டு, மேற்படி தொகைக்கு வீட்டுக்காரரிடமிருந்து கடன் சீட்டெழுதி வாங்கிக் கொள்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஊரில் வேறு வீடு கிடைக்காதபடியால் இவ்வித ஒப்பந்தத்தின் மீது செப்பனிட வேண்டிய வீட்டை வாங்கிக் கொள்ளுதல் இன்றியமையாத தாயிற்று. இந்த விஷயத்தைக் குறித்து மகாராஜாவிடம் தனியாகத் தெரியப்படுத்தி, அவர்கள் கொடுக்கிற தொகையுடன், நீயும் உன்னாலியன்றது சேர்த்துக் கூடியதொகையை 'ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி, பழைய கிராமம், கடையம்' என்ற விலாசத்துக்கு ஸ்ரீமதி சின்னம்மா சித்தி மூலமாக வேனும் நேரிலேனும் விரைவில் அனுப்பும்படி வேண்டுகிறேன்.

உனக்கு மகாசக்தி அமரத்தன்மை தருவாள்.

உனதன்புள்ள,

*சி. சுப்பிரமணிய பாரதி**

---

* தி. முத்துக் கிருஷ்ணன், மகாகவி பாரதியார் வாழ்க்கைச் சித்திரம், சென்னை, 1986, ப. 353.

கடைய வாஸம்

“விடுதலையடைந்து வந்த பாரதியாரைச் சென்னையிலிருந்து கடையத்திற்கு அழைத்துச் சென்றோம். பாரதியார் முன்பு சொன்ன வாக்கு மெய்யாயிற்று. புதுவையிலிருந்து வந்ததினால் அதிக சுகமொன்றும் நான் அடையவில்லை. எதிர்பார்த்ததற்கு மாறாகத்தான் பலன் கிடைத்தது.

கடுமையான யோகாப்பியாசத்தினாலும் சகிக்க முடியாத பல கஷ்டங்களாலும் என் கணவரது பொன்நிற மேனி கருகிப் பார்க்கச் சகிக்காமல் எலும்புந் தோலுமாக மாறியது.

‘சுதேசமித்திர’னுக்கு வியாசங்களும் கட்டுரைகளும் பாடல்களும் எழுதியனுப்பிக் கொண்டுதான் இருந்தார். பணமும் ஓரளவு கிடைத்து வந்தது வாஸ்தவமே. ஆனால், அவர் எதிர்பார்த்தபடி ஒரு ‘கலாநிலையம்’ ஏற்படுத்தக் கூடியவாறு இட உதவியோ பொருளுதவியோ கிட்டவில்லை. அப்போதுதான் உலக மகாயுத்தமும் முடிவடைந்த சமயம். கேட்பானேன்! புஸ்தகங்கள் அச்சிட்டு வெளியிடுவதற்கான முயற்சிகள்கூடப் பலனளிக்கவில்லை. பொருளாதார நிலை ஒரு காரணம். மற்றொன்று ‘கலையுணர்ச்சி’ நாட்டில் சிறிதளவேனும் இல்லாதது. மூன்றாவது மக்களைப் பிடித்திருந்த ஆங்கிலக் கல்வி மோகம்.

தமிழ் மக்களுக்குப் பாரதியார் சொன்னதெல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதினது போல்தான் ஆயிற்று.

கடையமோ நாகரிக வாஸனையில்லாத ஒரு பிற்போக்கான கிராமம். அவ்விடத்தில் உட்கார்ந்து கொண்டு சமூக முன்னேற்றத்திற்கு ஒருவன் உழைத்தால் அவன் கதி என்னவாகும்? ஆனாலும், கடைய வாஸத்தில் பாரதியார் ஆனந்தமடைவதற்கக் காரணங்களுமிருந்தன.

பாரதியார் இயற்கையன்னையின் தெய்வீகத் தோற்றத்தைக் காண ஆவல் கொண்டார். கடையத்தில் அவருக்குப் பிரியமான மலைகளும், ஆறுகளும் உண்டு. பழைய கிராமத்தில் மேற்கோபுரத்திலுள்ள பட்டர் வீட்டில் நாங்கள் வாஸம் செய்தோம். நாலு புறமும் விசாலமான வெளியுண்டு. சுற்றடைப்புச் சுவர் மண்ணிலானது. புளியமரமும் வேப்பமரமும் உண்டு. ஏழைக் குடியானச் சிறுவர்கள் தினந்தோறும் அதிகாலையில் வந்து

வேப்பம்பழம் பொறுக்கிக் கொண்டும், அடுப்பெரிக்கப் புளிய இலைச்சருகுகள் அரித்துக் கொண்டும் செல்லுவார்கள்.

ஒரு நாள் பாரதியார் அவர்களிடம் சென்று, "சிறுவர்களே! எதற்காக வேப்பம்பழம் பொறுக்குகிறீர்கள்?" என்றார். சாமி, வயிற்றுக்கில்லாததால் வேப்பம்பழத்தைத் தின்கிறோம்" என்றார்கள். அவர்களுடன் தாமும் சேர்ந்து வேப்பங்காயையும் புளியங்காயையும் பறித்துத் தின்றார்.

"பசுவானது சிருஷ்டிப் பொருள்கள் யாவும் அமிர்தம் நிறைந்தவை. 'வேப்பங்காய் கசக்கும்' என்று மனத்தில் எண்ணுவதனால்தான் கசக்கின்றது. 'அமிர்தம்' என்று நினைத்தால் தித்திக்கின்றது" என்று சொல்லி, அன்று முதல் நாவின்பத்தைத் துறந்தார்.

சின்ன வயதில் நெய் சற்று நாற்றமடித்தாலும் அவர் பாத்திரத்தோடு எடுத்து சாக்கடையில் ஊற்றிவிடுவார். அதி ருசியான உணவும், நேர்த்தியான புதிய புதிய ஆடையும் வேண்டுபவரான பாரதியார், **மனத்துறவு ஏற்பட்டு ஹரிஜனச் சிறுவர்களுடன் சேர்ந்து வேப்பங்காய் தின்னவும் இடுப்பில் மட்டும் நாலு முழ வேஷ்டி அணியவும் ஆரம்பித்தார்.**

கிராமத்திலிருந்து ஆற்றுக்குச் செல்லும் வழியில் பச்சைப் பசேலென்று கண்ணைக் கவரும் எலுமிச்சந் தோட்டங்களும், குயில் கூவும் மாந்தோப்புக்களும், தான்ய லஷ்மி தாண்டவமாடும் நெல் வயல்களும் பாரதியாரின் கண்களுக்குப் புனிதமான தோற்றம் அளித்தன. ஊருக்கு மேற்கே எங்கே பார்த்தாலும் ஒரே நீலமலைச் சிகரங்கள். அவைகளிலிருந்து விழும் நீர் வீழ்ச்சிகளும், சலசலவென்று ஓடும் சிற்றாறும் அவருக்குப் பரமானந்தம் அளித்தன.

இரண்டு மைல் தூரத்தில் கல்யாணி அம்மன் கோவில் இருக்கிறது. வீட்டிலிருந்து கொஞ்ச தூரத்தில் ஆற்றோரத்தில் 'தட்டப் பாறை' என்றொரு கல்பாறை உண்டு. அதில் ஏறிக் காலை மாலைகளில் உலாவுவார். அங்கிருந்து ஒரு மைல் சென்றால் 'வாஸகிரி' என்ற மலை இருக்கின்றது. மலைமேல் முருகக் கடவுளும், விநாயகரும் கோவில் கொண்டிருக்கிறார்கள்.

கல்யாணி அம்மன் கோவிலுக்குப் பின்புறமும் மலைகளே உள்ளன. அங்கே சுனைகளும் ரிஷீச்வரர்கள் தவம் செய்யும்

குகைகளும் உள்ளன. அவைகளுக்கு அருகில் பத்திரகாளி அம்மன் கோவில்; அதன் பக்கத்தில் ஒரு தடாகம். 'ஜகத் சித்திரம்' என்ற நூலில் பாரதியார் மேற்படி கோவிலை நன்கு வர்ணித்துள்ளார்.

அதற்கும் மேற்கே நான்கு மைல் தூரத்தில் சாஸ்தா கோவில்; இடையில் 'சூக்ஷமமுடையவர்' என்ற ஐயனாரின் ஆலயம். எப்படிப்பட்ட சஞ்சல மனமுடையரானாலுங்கூட அந்த இடங்களுக்குச் சென்றால் மனச்சாந்தி ஏற்படுவது திண்ணம்.

பாரதியாருக்கு இரவைத் தவிர மற்ற நேரமெல்லாம் மேலே சொன்ன இடங்களில்தான் கழியும் என்று பாரதியின் கடையம் வாழ்வைப்பற்றி செல்லம்மாள் பாரதி குறிப்பிட்டுள்ளார்.*

ரூ 2 லட்சம் பெறும்

பாரதியார் ஒரு நாள் தனது மகள்கள் சகுந்தலாவையும், தங்கம்மாளையும் அருகில் அழைத்து,

"குழந்தைகளே அப்பா தரித்திரன். உங்களுக்குச் சொத்து ஒன்றும் வைக்கவில்லையென்று எண்ணாதீர்கள்! இதோ தகரப் பெட்டியில் இருக்கும் கையெழுத்துப் பிரதிகள் குறைந்தது 2,00,000 ரூபாய் பெறுமானவை.

பாப்பா: (சகுந்தலா) சரி, அப்பா! உங்களுக்கோ பிள்ளைகள் இல்லையே, நீங்கள் வைத்திருக்கும் 2,00,000 ரூபாயும் சித்தப்பா பிள்ளைக்கன்றோ போய்ச் சேரும்? நம் நாட்டில் பெண்களுக்குத்தான் சொத்துரிமையில்லையே,

"ஹஹ், ஹங்ஹா - ஸபாஷ்! ரொம்பப் பேஷ்! நல்ல கேள்வி, பாப்பா, நம்மாத்தில் சட்டமோ 'ரூலோ, ஒன்றும் கிடையாது. தயாதிச் சண்டை இங்கேது? நீ கேவலம் இரண்டு லக்ஷம் ரூபாய்க்கு இவ்வளவு கணக்குக் கேட்கிறாயே! **நமக்கு ராஜ்யமே கிடைக்கும்போது, ரூபாய் எதற்கு? மேலும் இந்த ஜன்மத்திலோ நான் சாகப் போவதில்லை. உனக்கேன் இவ்வளவு சந்தேகம்.**

"பாப்பா! வருங்காலம் பெண்களுக்கு நல்ல காலம். கொஞ்சங்கூடக் கவலைப்படாதே! உன்னுடைய குழந்தை உள்ளத்தில் இது போன்ற கவலைகளை நுழைக்காதே!" என்று கூறினார்.

---

* செல்லம்மா பாரதி, தவப்புதல்வர் பாரதியார் சரித்திரம், சக்தி காரியாலயம், சென்னை, 1941, பக். 119 – 122.

1919 மார்ச் சென்னை சென்ற பாரதி காந்தியடிகளைச் சந்திக்கிறார். 1919 மே, 2, 3-இல் எட்டயபுரம் ஜமீன்தாரான வெங்கடேசுவர எட்டப்ப பூபதியைச் சந்திக்க விரும்பி சீட்டுக் கவிகள் எழுதினார். இந்நிலை 1919 ஆகஸ்ட் 6-இலும் தொடர்கிறது. ஏதும் பலன் தரவில்லை.

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

பொட்டல்புதூர் தெற்கு மனைத்தெருவில் இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை என்னும் பொருள் பற்றி 1920 ஜூன் 20-இல் பாரதி உரையாற்றினார். பொட்டல்புதூர் இனாம்தார், நண்பர் செய்யது சுலைமான் போன்றோர் கடையத்தில் பாரதியைச் சந்தித்து உரையாடுவர்.

பாபநாசம் – கதாமாலிகா

10.11.1920-இல் சுதேசமித்திரன் காரியாலயம் வெளியிட்ட 'கதாமாலிகா' எனும் 256 பக்கங்களைக் கொண்டு ஒரு ரூபாய் விலையில் வெளிவந்த 34 விஷயங்களைக் கொண்ட நூல். இதில் 29 பாரதி எழுதியது. இரண்டு கட்டுரைகள் செல்லம்மாள் பாரதி எழுதியது. அதில் கடையத்தில் இருந்தபோது, பாரதி பாபநாசம் சென்று வந்த செய்தியை 'பாபநாசம்', அருவி அல்லது 'வள்ளி வாணதீர்த்தம் ஆடின கதை' என்ற கட்டுரைகள் வாயிலாக அறியமுடிகிறது.

கல்லிடைக்குறிச்சி – திருவனந்தபுரம்

கல்லிடைக்குறிச்சிக்கும், திருவனந்தபுரத்திற்கும் பாரதி கடையத்தில் இருந்தபோது தன் குடும்பத்தோடு சென்று திரும்பியுள்ளார்.

திருநெல்வேலி மாநாட்டிற்குச் செல்லவில்லை

1920-ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் தாமிரவருணி நதிக்கரையில் தமிழ் மாகாண அரசியல் மகாநாடு கூடியது. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் தலைமை வகித்தார். இந்த மாநாட்டிற்கு பாரதியின் மருமகன் சங்கரனும் மற்றும் இருவரும் கடையத்திலிருந்து சென்று வந்தனர். பாரதி கடையத்தில் இருந்தும் திருநெல்வேலியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குச் செல்லவில்லை.

வேதபுரம் – கடவூர்

தான் வாழ்ந்த கடையத்திற்குப் பாரதி 'வேதபுரம்', 'கடவூர்' என்ற பெயர்களைச் சூட்டினார். கடையம் பழைய கிராமத்தில் பெண்களால் கொண்டாடப்படும் விரதத்தின்போது அவர்கள் விருப்பத்திற்கிணங்க 'ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்' எனும் பாடலை பாரதி பாடிக் காட்டினார்.

தமிழ் வளர்ப்புப் பண்ணை

அரிய தமிழ் நூல்கள் மலிவு விலையில் வெளிக் கொண்டு வர 'தமிழ் வளர்ப்புப் பண்ணை' ஒன்றை கடையத்தில் அமைக்க விரும்பியவர் பாரதி.

கடையம் நண்பர்கள்

ஆறுமுகக் கம்பர் என்ற சாயவேட்டிக் கம்பர், சங்கரலிங்க மூப்பனார் கனகசபாபதிப் பிள்ளை, சிவமாணிக்கம் பிள்ளை, முத்தையாபிள்ளை நாராயண பிள்ளை, பொன்னையா நாடார், பெருமாள்ராயர், தங்கையா நாடார் போன்றவர்கள் பாரதியின் கடையம் நண்பர்கள் ஆவர்.

கடையம் நாராயணபிள்ளை

கடயத்தில் பாரதி இருந்த இரண்டாண்டு காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் நண்பராக விளங்கியவர் சாவடி நாராயணபிள்ளை என்பவர். நில புலன்கள், நிறைந்தவர். பெருநிலக்கிழார்.

'ஸ்ரீ நாராயண பிள்ளை வீட்டுப் பின்புறம் பெரிய ரோஜா தோட்டமுண்டு. காலை வேளையில் ரோஜாப் பூக்கள் கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கும் அழகைக் கண்டு என் தந்தை மனம் பூரித்துப் போவார். பின்னர் ஸ்ரீ நாராயண பிள்ளையும் நானும் மற்றும் சில வேலைக்காரர்களும் ரோஜாப் பூக்களைப் பறித்துக் கொணர்ந்து ஒரு பெரிய தொட்டியில் கொட்டுவோம்' என்று பாரதியின் புதல்வி சகுந்தலா நாராயண பிள்ளை குறித்து தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

செட்டிநாட்டில், நகரத்தார்கள் பாரதிக்கு அன்புடன் வழங்கிய மாணிக்கக்கல் இழைத்த பேனாவை, அன்பளிப்பாகக் கொடுக்குமளவுக்கு பாரதி நாராயணபிள்ளை நட்பு இருந்தது.

---

* சகுந்தலா பாரதி, என் தந்தை, கல்கத்தா, 1974, ப. 63.

கற்பூரப் பூங்காவனம்

'கற்பூரப் பூங்காவனம்' என்று சொல்லும் வண்ணம் இருந்த தமது தோட்டத்திலிருந்து பாரதியாருக்குத் தினமும் ஒட்டு மாம்பழமும், மாதுளைப் பழமும், ரோஷா புஷ்பமும், ராஜமல்லிகைப் புஷ்பமும், எலுமிச்சம் பழமும் கொணர்ந்து கொடுப்பார் ஸ்ரீ நாராயணபிள்ளை. ரோஜா மலரைத் தாமே பாரதியாருக்குச் சூட்டி மகிழ்வார்.*

"பாரதி தினமும் காலையில் நாராயணபிள்ளை வீட்டுக்குப் போவார். அங்கே அவருக்கு சிற்றுண்டி உபசாரம் நடக்கும். பிறகு இருவரும் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள். 1919-இல் சென்னை ராஜதானியில் பிராமணரல்லாதார் இயக்கம் தீவிரமாகப் பரவிக் கொண்டிருந்தது. நாராயணபிள்ளை பிராமணரல்லாதார் இயக்கத்தைத் தீவிரமாய் ஆதரித்தார். அது பற்றி அவரும் பாரதியும் காரசாரமாக விவாதிப்பார்கள்.

ஒரு நாள் நாராயணபிள்ளை, மொட்டையடித்துக் கொண்டு, விபூதி தரித்து, ஒரு பூணூலும் அணிந்து, பாரதியிடம், பாரதி, உங்களுக்கும் எனக்கும் இனி ஒரு வித்தியாசமும் கிடையாது. நானும் பூணூல் அணிந்து கொண்டுவிட்டேன் பார்த்தீர்களா? என்றார்.

பாரதி நிதானமாகத் தமது கோட்டுப் பித்தான்களை நீக்கி, உள்ளிருந்த தமது பூணூலை வெளியே எடுத்து, 'பட்'டென்று அதை அறுத்துச் சுருட்டி எறிந்து, "பிள்ளைவாள், இப்போது நான் பூணூலுடன் இல்லை. எறாலும், என்னை பிராமணன் அல்ல என்று சொல்ல முடியாது. நீங்கள் பூணூல் அணிந்திருந்த போதிலும் உங்களை பிராமணன் என்று கூறிவிட முடியாது!" என்று கூறி, வேத உபநிடதங்களில் கூறியுள்ள விஷயங்களை விவரமாக எடுத்துச் சொன்னார். இதனாலெல்லாம் அவர்களது நட்பு கெடவில்லை.

கடையத்தைவிட்டு சென்னை விரைந்தார்!

பாரதி நாராயண பிள்ளை நட்பு 1920-இல் ஒரு நாள் எதிர்பாராதபடி பெரும் பகையாக மாறிவிட்டது.

---

* செல்லம்மா பாரதி, தவப்புதல்வர் பாரதியார் சரித்திரம், சென்னை, 1941, ப. 123.

ஒருநாள் பாரதியும் நாராயண பிள்ளையும் கலப்புத் திருமணம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று நாராயணபிள்ளை, 'பாரதி, நாம் இருவரும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் பழகி வருகிறோமே, உங்கள் மகள் சகுந்தலா பாப்பாவை என் மகனுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் என்ன?' என்று கேட்டார்.

பாரதியின் மகள்

சகுந்தலாவுக்கு அப்போது வயது 12 ஆகவில்லை. பாரதி, சற்று உஷ்ணமாகவே, 'கலப்பு மணத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கும் எண்ணம் உங்களுக்கு இருக்குமானால், நீங்கள் முதலில் உங்கள் மகனுக்கு ஒரு பறை அல்லது சக்கிலியப் பெண்ணைத் தேடித் திருமணம் செய்விக்க வேண்டியது. அதன் பிறகு பாப்பா திருமணத்தைப் பேசலாம்' என்றார்.

பிள்ளையும் பாரதியும் இதன்பின் கடுமையாக வாதப் பிரதிவாதம் செய்தார்கள். முடிவில், பாரதி ஒன்றும் சொல்லாமல் விடுவிடென்று வெளியேறி, தம் வீடு சேர்ந்தார். அப்போது காலை 11 மணி இருக்கும்.

நாராயணபிள்ளை செல்வந்தரானதால் அவரது நடவடிக்கைகளை விமர்சிக்கவும் ஊரார் பயப்படுவார்கள். மனைவியை இழந்த அவர், ஊர்க்கோவில் அர்ச்சகராக ஒரு பிராமணரின் மனைவியைத் தம் வீட்டில் வைத்துப் பராமரித்து வந்தார். அந்த அர்ச்சகரும், நிர்ப்பந்தம், லாபம் இரண்டையும் கருதி, அதைப் பொருட்படுத்தாமல் இருந்தார். நாராயண பிள்ளையிடம் லைசென்ஸ் பெற்ற துப்பாக்கி இருந்தது. இதுவும் அவர் பற்றி எவரும் பேசப் பயந்த காரணங்களில் ஒன்றாகும்.

வீட்டுக்கு வந்த பாரதி மனம் நொந்து திண்ணையில் அமர்ந்திருந்தார். அச்சமயம் அந்த அர்ச்சகர் தெரு வழியே போனார். பாரதி திண்ணையிலிருந்து குதித்து, அர்ச்சகரிடம், 'உன் போன்ற மானங் கெட்டவர்களின் செய்கையால்தானே நாராயணபிள்ளை என்னைப் பார்த்து அக்கேள்வி கேட்கும்படி ஆயிற்று!' என்று சொல்லி, அவர் கன்னத்தில் பளீரென்று அறைந்துவிட்டார். அர்ச்சகர் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி, நாராயண பிள்ளையிடம் முறையிட்டார்.

நாராயண பிள்ளைக்குக் கட்டுக்கடங்காத ஆத்திரம் ஏற்பட்டுவிட்டது. தன் வேலையாள் ஒருவனை அனுப்பி, பாரதியின் மைத்துனரான அப்பாதுரையை வரச்சொன்னார். பதறிப் போய் விரைந்து வந்த அப்பா துரையிடம், ஒரே வாக்கியத்தில், அன்று இரவுக்குள் பாரதியைக் கடையத்தை விட்டு வெளியேற்றாவிட்டால், ஆட்களை ஏவி அவரை இரவே தீர்த்துக் கட்டிவிடப் போவதாக எச்சரித்தார் நாராயண பிள்ளை.

பாரதி வீட்டில் ஒரே குழப்பம், கலக்கம். சொன்னதைச் செய்து காட்டும் திறனுள்ளவர் பிள்ளை. ஆகையால், பாரதியை எங்கே அனுப்புவதென்று பல யோசனைகள் செய்து, முடிவில் அவரையும் குடும்பத்தாரையும் சென்னைக்கு அனுப்பத் தீர்மானித்தார்கள். விடியற்காலை நாலு மணிக்கு வரும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸுக்குக்கூடக் காத்திராமல், பிற்பகல் 2.30க்கு வரும் செங்கோட்டைப் பாஸஞ்சரில் அவர்களை ஏற்றி அனுப்பினார்கள். அவசர அவசரமாக எடுத்துக் கொண்ட சில மூட்டை முடிச்சுகளுடன், 36 மணி நேரம் பயணம் செய்து, பாரதியும் குடும்பத்தாரும் மறுநாள் பிற்பகலில் சென்னையை அடைந்தார்கள். இந்த தகவல் பாரதியின் மைத்துனர் அப்பாதுரையின் புதல்வர் சுந்தரராமனால், எழுதப்பட்டு அச்சில் வராத கட்டுரையிலிருந்து தந்தவர் பாரதி ஆய்வாளர் ரா.அ. பத்மநாபன்.*

மீண்டும் சுதேசமித்திரனில்

மீண்டும் 1920 செப்டம்பரில் சென்னை வாசியானார். சுதேசமித்திரனில் பணியாற்றினார். 1920 நவம்பர் 15 முதல் பாரதியின் எழுத்துக்கள் சுதேசமித்திரனில் வெளிவரலாயின. 1921 ஜூனில் திருவல்லிக்கேணி கோயில் யானையால் தாக்குண்டார். 1921 ஜூலை 21 ஈரோட்டையடுத்த கருங்கல் பாளைய வாசகசாலை ஐந்தாவது ஆண்டு விழாவில் கலந்து பேசினார்.

இறுதி நாட்கள்

நோயின் கடுமையால் அவதியுற்று 1921 செப்டம்பர் 10 பாரதியின் உடல்நிலை மோசமாகிறது. 1921 செப்டம்பர் 11-ஆம் தேதி நள்ளிரவு தாண்டி 12-ஆம் தேதி அதிகாலை 1 மணிக்கு மரணம் அடைந்தார் பாரதி.

---

* ரா. அ. பத்மநாபன், சித்திரபாரதி, சென்னை, 1982, பக். 163 – 164.

14.08.1923

1923-ஆம் வருடம் ஆகஸ்ட் 14-ஆம் நாள், தாயற்ற பாரதியை அன்புடன் பராமரித்து வந்த சிறு தாயார் சின்னம்மாள் தனது மருமகளான செல்லம்மளுக்கு தனது சொத்தில் இருந்து ஒரு சிறு பகுதியை எழுதிக் கொடுத்தார். இதோ அந்தப் பத்திரம் . . . (முதன் முதலில் அச்சில்)

கோவில்பட்டி தாலுகா – ஆவண எண் 1258 / 1923

1923-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 14-ஆம் தேதி கோவில்பட்டி தாலுகா கஸ்பா எட்டயபுரத்தில் இருக்கும் சி. சுப்பிரமணிய பாரதி அவர்கள் ஸ்தீரி பிராமணாள் சுகவாசி ஜீவனம் செல்லம்மாளுக்கு, மேற்படி ஊரில் இருக்கும் சீதாராமய்யர் ஸ்தீரி மேற்படி ஜாதி சீவனம் சின்னம்மாள் எழுதிக் கொடுத்த ஸெட்டில்மெண்டு பத்திரம் என்னவென்றால்,

நீ என் தமக்கை மகனுடைய ஸ்தீரியாகவும், எனக்கு குழந்தையில்லாததாலும், உனக்கு வீடு இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பதாலும், நான் உனக்கு தயா விஷயமாய் தன் தபசில் கண்ட ரூ. 25 பெறுமான காலிமனையை ஸெட்டில்மெண்டு செய்து கொடுத்திருக்கிறபடியால் நீ மேற்படி நிலத்தில் உன் சொந்தச் சிலவால் வீடு கட்டி அனுபவித்து வருவாயாகவும் என் ஜீவ காலம் வரை நீ மேற்படி நிலத்தை யெவ்வித பாரதீனமும் செய்யக் கூடாது. என் ஜீவ திசைக்குப் பின் தபசில் சொத்தை நீயும் உன் வாரீஸ்களும் சர்வசுதந்திரமாய் தானாதிவி காரியங்களுக்கு உபயோகரியமாகவும், அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

தபசில்

கோவில்பட்டி தாலுகா எட்டயபுரம் சப்ரிஜிஸ்தர் சரகம் கஸ்பா எட்டயபுரத்தில் 1916-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 10-ஆம் நாள் எட்டயபுரம் வைத்தியர் எக்ஞாமய்யர் அவர்களிடமிருந்து 25 ரூபாய்க்கு வாங்கி என் அனுபோகத்திலிருக்கும் காலி மனைக்கு மேலாவது, பெருமாள் கோவில் தெற்கு மாட வீதியில் அர்ச்சகர் வெங்கிடாசலமய்யங்கார் வீட்டு எல்லைக்கு மேற்கு, அமுதம்மாள் வீட்டுமனைக்கு வடக்கு, ஈரால் ஸ்ரீநிவாசய்யங்கார் வீட்டுக்கும் தென்வடல் முடுக்கும்

கிழக்கு, கிழமேல் வீதிக்கும் தெற்கு இதற்குள்பட்ட கிழமேல் கெஜம் 6 தென் வடல் கெஜம் 18 உள்ள மனைநிலம் தபசில் சரி.

கீரல் சின்னம்மாள்

சாட்சிகள்: அமுதுக் கிருஷ்ணய்யங்கார்,
த/பெ அழகாய்யங்கார் எட்டயபுரம்,
P.S. வெங்கு அய்யர்,
S/o சூரிய நாராயண அய்யர்,
எட்டயபுரம்.

(கலிங்கம்பிள்ளை சப்ரிஜிஸ்தார்; எட்டயபுரம் சப்ரிஜிஸ்தர் ஆபீஸ் 1 புஸ்தகம் 125-வது வால்யூம் பக்கம் 320 - 321. 1923 ஆகஸ்ட்)

25 ரூபாய் பெறுமான காலிமனை

1923-இல் 25 ரூபாய் மதிப்புள்ள எட்டயபுரத்திலிருந்த காலிமனையை சின்னம்மாள், செல்லம்மாள் பாரதிக்குத் தந்துள்ளார்.

1930–இல் கடையத்தில்

1930-இல் அம்பாசமுத்திரம் வடக்குத் தெரு குருசாமி சாஸ்திரியார் மகன் வக்கீல் கிருஷ்ணய்யர் எட்டயபுரம் சி. சுப்பிரமணிய பாரதி மனைவி சுகவாசி ஜீவனம் பிராமணாள் செல்லம்மாளுக்கு 90 ரூபாய் மதிப்புள்ள காலிமனையை கிரையம் செய்து கொடுத்துள்ளார். அந்த பத்திர விஷயம் இதோ . . . (முதன் முறையாக அச்சில்)

கடையம் சார்பதிவாளர் அலுவலகம்

1930–ஆம் வருடத்திய ஆவண எண் 574

ரூ. 90–க்கு கிரையம்

1930-ஆம் வருடம் 1105 ஆம் வருடம் பங்குனி மாதம் 26-ஆம் நாள் ஏப்ரல் மாதம் 8-ம் தேதி கடையம் சப்ரிஜிஸ்தர் ஆபீசில் தாக்கல் செய்தது. ஜி. கிருஷ்ணய்யர் எழுதிக் கொடுத்ததாக ஒப்புக் கொண்டது.

அம்பாசமுத்திரம் தாலுகா கஸ்பா வடக்குத் தெருவில் இருக்கும் குருசுவாமி சாஸ்திரியார் அவர்கள் குமாரர் பிராமணாள் வக்கீல் ஜீ. கிருஷ்ணய்யர், எட்டையபுரம் சி. சுப்பிரமணிய பாரதி

அவர்கள் ஸ்தீரி, சுகஜீவனம் பிராமணாள் செல்லம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் என்னவென்றால் இதன் தபசில் கண்டதும், எனக்கு கிரைய மூலமாய் பாத்தியப்பட்டு நான் அனுபவித்து வருகிறதுமான காலிமனையை நான் உமக்கு நாளது தேதியில் கிரயம் செய்து தந்து பணப்பற்று விபரப்படி ரூ. 90 ரூபாய் தொண்ணூறு பெற்றுக் கொண்டு மேற்படி சொத்தை உம்முடைய அனுபவத்தில் நாளது தேதியில் விட்டுவிட்டபடியால் மேற்படி சொத்து சர்வ சுதந்திர பாத்தியமாயும், புத்திர, பௌத்திர பரம்பரராயும் தானாதி காரியங்களுக்கும் போக்கிமாயும் ஆண்டு அனுபவித்துக் கொள்வீராகவும்.

பணப்பற்று விவரம்

நாளது தேதியில் உம்மிடம் நான் ரொக்கம் பெற்றுக் கொண்டது ரூ. 90 ரூபாய் தொண்ணூறுக்கும் விபரம் சரி.

தபசில்

திருநெல்வேலி டிஸ்திரிகட் கடையம் சப் ரிஜிஸ்டர் சரகம் தெற்கு கடையம் பழைய கிராமத்தில் தென்வடல் முடுக்குக்கு கிழக்கு தெரு வாரங்காலுக்கு தெற்கு கிழமேல் நாராசத்துக்கு வடக்கு, சு. கிருஷ்ணஸாமி அய்யருடைய மனை வீட்டுக்கு மேற்கு, இதற்குட்பட்ட மனை கிழமேல் தச்சு முழம் 5 தென்வடல் தச்சு சுமார் 40 முழம் உள்ள மனை விபரம் சரி.

சாட்சிகள்: A. கல்யாணி சுந்தரய்யர், கடையம்

அண்ணாதுரை அய்யர்

த/பெ சங்கர நாராயண அய்யர்,

கடையம்.

கடையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1930-ம் வருடம் 1 வது புஸ்தகம் 290 வால்யூம் 434 பக்கத்தில் பதிவாகியுள்ளது.

1948–இல் உயில்

1923-இல் எட்டயபுரம் சின்னம்மாள் தந்த காலிமனை, 1930-இல் அம்பாசமுத்திரம் கிருஷ்ணய்யரிடம் கிரையம் பெற்ற கடையம் காலிமனை இவைகளை 1948-இல் செல்லம்மாள் பாரதி தனது உயில் மூலம் தன் பிள்ளைகளுக்கு எழுதி வைத்துள்ளார்.

முதன் முறையாக அச்சில் வரும் அந்த உயில் வாசகங்கள் இதோ . . .

ஆவண எண் 3 / 1948

உயில் தஸ்தாவேசு மதிப்பு ரூ.2000.00
1948-ம் வருடம் மார்ச்சு மாதம் 1 ஒரு திக்கு
1123-ம் வருடம் மாசி மாதம் 18 தி

அம்பாசமுத்திரம் தாலுகா தெற்கு கடையம் பழைய கிராமம் சி. சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் ஸ்திரி பிறாமணாள் சுகவாசி தற்சமயம் பாளையங்கோட்டையில் இருக்கும் சுமார் 65 வயசுள்ள செல்லம்மாள் ஆகிய நான் நல்லறிவோடும் மனப்பூர்வமாயும் எழுதி வைத்த உயில் தஸ்தாவேசு என்னவென்றால்,

எனக்கு தங்கம்மாள் 1, சகுந்தலா அம்மாள் 2 பெண்கள். அவர்களுக்கும் விவாகமாகி அவரவர்கள் பர்த்தாவுடன் இருந்து வருகிறார்கள். எனக்கு விருத்தாப்பிய காலமாய் விட்டபடியாலும் அடிக்கடி சீக்குகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறபடியாலும் இனிமேல் அதிக நாள் ஜீவித்திருப்பேனென்ற நம்பிக்கை இல்லாததாலும் எனக்கு சுயார்ஜிதமாயும் செட்டில்மெண்ட் மூலமாயும் பாத்தியப்பட்ட இதன் தபசில் கண்ட சொத்துக்கள் விஷயமாய் நான் செய்து வைக்கும் ஏற்பாடாவது என் மூத்த குமாரத்தி தங்கம்மாள் அவள் பிள்ளைகளைப் படிக்க வைத்துக்கொண்டு பாளையங்கோட்டையில் குடியிருந்து வருகிறாள். என் விருத்தாபிய காலத்திலும் எனக்கு ஏற்படும் சீக்குகள் காலத்திலும் அவளே எனக்கு வேண்டும் பணிவிடைகள் செய்தும் அன்ன ஆகாரங்கள் வேண்டியபடி நடத்தியும் எனக்குத் திருப்தியாய் நடந்து வருவதை உத்தேசித்து நானும் அவள் கூடவே பாளையங்கோட்டையில் இருந்து வருகிறேன். இனிமேலும் க்ஷயாள் திருப்தியாய் நடந்து வருவாள் என்ற நம்பிக்கையும் இருந்து கொண்டிருக்கிறது. என் 2-வது குமாரத்தி சகுந்தலா அம்மாள் மலாய் நாட்டில் அவள் பர்த்தாவுடன் அங்கு குடியிருந்து வருகிறாள். எனக்கு கடையம் சப்ரி சரகத்திலும் பாளையங்கோட்டை டிஸ் எட்டயபுரம் சப்ரி ஆபிசு சரகத்திலும் எனக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களுக்குப் பக்கத்தில் க்ஷ தங்கம்மாளுக்கும் சேர்க்கடையாய் சொத்துக்கள் இருப்பதால் அவளையே சேர வேண்டுமென்பதை உத்தேசித்தும் எனக்குப் பாத்தியப்பட்ட ரூ.2000 இரண்டாயிரம் பெறுமான தபசில் சொத்துக்களை பாளையங்கோட்டையிலிருக்கும் களக்காடு H தாணுவய்யரவர்கள் ஸ்திரி பிராமணாள் பர்த்தாவின் கீழ் ஜீவனம் தங்கம்மாள் என் ஆயுசுக்குப் பின் சர்வ சுதந்திர பாத்தியமாயும் புத்திர

பௌத்திர பரம்பரையாயும் ஆண்டனுபவித்துக் கொள்ள வேண்டியது. தங்கம்மாள் என் ஆயுசுக்குப் பின் உடனே க்ஷ யாளுக்கு தங்கையும் என் இளைய குமாரத்தியுமான மலாய் நாட்டிலிருக்கும் நடராஜய்யர் அவர்கள் ஸ்திரி பிராமணாள் பர்த்தாவின் கீழ் ஜீவனம் சகுந்தலா அம்மாளுக்கு ரூ 1000 ஆயிரம் ரொக்கமாகக் கொடுத்து ஆதரவு பெற்றுக் கொள்ள வேண்டியது. இந்த உயில் என் ஆயுசுக்குப் பின் ஊர்ஜிதத்திற்கு வரவேண்டியது. இந்த உயிலை மாற்றவும் ரத்துச் செய்யவும் எனக்கு அதிகாரமுண்டு.

தபசில்

திருநெல்வேலி மாவட்டம் கடையம் சார்பதிவகம் கீழக்கடையம் கிராமம் அநச 524 நிரில் வடபாதி செண்ட் 12-ல் மேற்கடைய செண்ட் 5-க்கு எல்கை இதனடியிற் கண்ட 525 நிர் நிலத்துக்கு கிழக்கு வாய்க்காலுக்கு தெற்கு தங்கம்மாள் 7 செண்டு நிலத்துக்கு மேற்கு K. சுப்பிரமணிய அய்யர் நிலத்துக்கு வடக்குமானதும் அநக 525 நிர் செண்ட் 19 ஆக செண்ட் 24-ம் க்ஷ சார்பதிவகம் தெற்கு கடையம் கிராமம் பழைய கிராமத்தில் வீடுமனைக்கு எல்கை தென்வடல் முடுக்குக்கு கிழக்கு தெரு வாரங்காலுக்கு தெற்கு கிழமேல் நாரசத்துக்கு வடக்கு தங்கம்மாள் வீட்டுச் சுவருக்கு மேற்குமான கிழமேல் 5 தென்வடல் 40 தச்சு முள மனையும் இதில் வடக்கே பார்த்து கட்டியிருக்கின்ற மட்டப்பா வீடு 1-ம் இது கடையம் யூனியன் வரி விதிப்பு 985 நிராக உள்ளதும்,

கோவில்பட்டி தாலுகா எட்டயபுரத்திலிருக்கும் சீதாராமய்யரவர்கள் ஸ்திரி சின்னம்மாளால் என் பேருக்கு திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் எட்டயபுரம் சப்டிஸ் எட்டயபுரம் கஸ்பாவில் க்ஷ 1 - 125 - 320 - 321 - 1923-ம் வருடத்து 1258 நிராக செட்டில்மெண்டு எழுதி வைக்கப்பட்டு என் அனுபோகத்திலிருந்து வருகிற காலிமனைக்கு எல்கை வெங்கடாசலமய்யங்கார் வீட்டுக் கொல்லைக்கு மேற்கு அ. முத்தம்மாள் வீட்டு மனைக்கு வடக்கு ஈரால் ஸ்ரீநிவாசய்யங்கார் வீட்டுக்கும் தென்வடல் முடுக்குக்கும் கிழக்கு கிழமேல் வீதிக்கு தெற்குமான கிழமேல் 6 தென்வடல் 18 கெஜமுள்ள மனையும் சரி.

வரி 16-ல் எட்டயபுரம் சப்டிஸ்ஸை சேர்ந்த வரி பிளப்பு தபசில் மதிப்பு ரூ.2000.00 சாக்ஷிக்கு கீழ் செல்லம்மாள் அடித்தல் செல்லம்மாள் சாக்ஷிகள் K.A. Perumal Rayer Son of Karpagavinayagam

Pillai, Therku Kadayam க்ஷ பொன்னையா கனபாடிகள் பழைய கிராமம் (e) தெற்கு கடையம் எழுதியது K.P. கந்தசாமியா பிள்ளை சாவடி செல்லப்பெருமாள் பிள்ளையவர்கள் அபிமான குமாரர் தெற்கு கடையம்.

பாளையங்கோட்டையில் செல்லம்மாள்

இந்த உயிலிலிருந்து பாரதியின் மனைவி செல்லம்மாள் பாளையங்கோட்டையில் வாழ்ந்து வந்தார் என்பதனை அறிகிறோம்.

பாரதி மறைவிற்குப் பின் . . .

பாரதி நூல்களையெல்லாம் பிரசுரிக்க வேண்டும்; இந்நூல்களின் விற்பனை மூலம் பாரதி குடும்பத்திற்கு உதவ வேண்டும் என்று எண்ணினர். 1921 செப்டம்பரிலேயே சென்னையில் கூடிய பாரதி நண்பர்கள் சோமதேவ சர்மா உள்ளிட்டதொரு கமிட்டியை நிறுவினார்கள். நண்பர்களும் உதவினர்; தமிழ் மக்கள் 12 ரூபாய் வீதம் முன்பணம் அனுப்பினர்; திலகர் ஸ்வராஜ்ய நிதியிலிருந்து ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. ரங்கூன் தமிழ் அன்பர்கள் கொஞ்சம் நிதி அனுப்பினர்.

பாரதி ஆசிரமம்

பாரதியின் மனைவி செல்லம்மாளும், மைத்துனர் அப்பாத்துரையும் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் 'பாரதி ஆசிரமம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி பாரதி நூல்களை வெளியிட்டனர்.

1922

பாரதியின் **'தேசீய கீதங்கள்'** இரு பாகங்கள் **'குயில்'**, **'கண்ணன் பாட்டு'**, **'பாரதி அறுபத்தாறு'** மூன்றும் அடங்கிய நூலும் வெளியாயின. நூல்களின் விற்பனை அவ்வளவாக இல்லை. அதன் பின் வர இருந்த நூல்கள் வரவில்லை.

வை.சு. சண்முகம் – 1923

பாரதி இருந்த காலத்தில் அவருக்குப் பொருளுதவி செய்தவரும், பாரதியை கானாடுகாத்தானுக்கு அழைத்துச் சென்று உபசரித்து அங்கேயே குடும்ப சகிதம் நிரந்தரமாய் வசிக்கும்படி வேண்டிக் கொண்டவர் வை.சு. சண்முகம். பாரதி மறைவிற்குப்பின்,

அவரது குடும்பத்தின் சிரமத்தைப் போக்கும் வகையில், பாரதி நூல்களின் உரிமைக்கு ரூ.10,000 கொடுத்திடவும், அதனை முறைப்படி பிரசுரித்திடவும் முயன்றார். இதற்கு செல்லம்மாள் பாரதி சம்மதித்தார். ஆனால் அவரது தமையனார் ஆர்வம் காட்டாததால் அந்த ஏற்பாடு நடைபெறவில்லை.

1923-ஆம் ஆண்டுக்குள் 'பாரதி ஆசிரமம்' நூல் பதிப்பு வேலை நின்றே போயிற்று. நூல்களின் விற்பனையும் நடைபெறவில்லை.

1924

விற்பனையாகாமல் முடங்கிக் கிடந்த பாரதி நூல்களின் பிரதிகளை, பாரதியின் 'இந்தியா' பத்திரிகையில் பணியாற்றிய வி. ஹரிஹர சர்மாவிடம் ஒப்படைத்தனர். அவர் அந்த நூல்களை விற்று பாரதியின் குடும்பத்திற்கு மாதம் ஒரு தொகை தருவதற்கு ஏற்பாடு ஆயிற்று.

பாரதி நூல்களின் உரிமைகளை விற்பது பற்றி பேச்சு திரும்பவும் எழுந்தது. இப்போது ரூபாய் 3500க்கு மேல் தர யாரும் முன்வரவில்லை. அதையும் தவணை முறையில் தருவதாகவே சொன்னார்கள்.

சகுந்தலா திருமணம் – பூ. சுப்புராஜா

ஹரிஹரசர்மாவும், பாரதியார் தம்பி சி. விசுவநாதனும். பாரதியின் இளைய புதல்வி சகுந்தலாவின் திருமணத்திற்காக பாரதி நூல்களை வைத்து ரூபாய் 2000 கடனாகப் பெற்றார்கள்.

பாரதி அன்பர் பூ. சுப்புராஜா 1924-இல் 2000 ரூபாய் நன்கொடை அளித்தார். திருமணம் நடந்தேறியது.

பாரதி பிரசுரலாயம் 1924

ஹரிஹரசர்மா, சி. விசுவநாதன், சகுந்தலாவின் கணவர் நடராசன் மூவரும் சேர்ந்து 'பாரதி பிரசுராலயம்' அமைத்தனர். பாரதி நூல்களின் உரிமை பாரதி குடும்பத்தாரிடமே இருக்க, பாரதி நூல்களை வெளியிடும் பணியை பாரதி பிரசுரலாயம் மேற்கொண்டது.

1928

1928 ஆகஸ்ட் 7 பர்மா கவர்னர், திருவல்லிக்கேணி பாரதி

ஆசிரமம் வெளியிட்டுள்ள பாரதி 'தேசிய கீதங்கள்' இரண்டு பாகங்களும் பர்மா மாகாணத்தில் நுழையக்கூடாதென்று தடை பிறப்பித்தார். இந்தியாவில் ஒரு மாகாணமாக இருந்த பர்மா அரசாங்க உத்திரவு சென்னை அரசாங்க கெஜெட்டில் வெளியாயிற்று. திருவல்லிக்கேணி தலையாரி தெருவிலிருந்த பாரதி ஆசிரமத்தையும், பாரதி நூல்களை விற்று வந்த ஓ.என். தண்டபாணி கம்பெனியும் சோதனைக்குள்ளாயிற்று. பாரதியாரின் நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இது குறித்து சட்டசபையில் 1928 அக்டோபர் 9-இல் ஒத்தி வைப்பு பிரேரணை கொண்டு வரப்பட்டது.

1931

பாரதி குடும்பத்தார் பாரதி நூல்களின் உரிமைகளை 4000 ரூபாய்க்கு பாரதி பிரசுராலயத்திற்கு 1931-இல் விற்றனர். ஏற்கனவே பாரதியின் இளையமகள் சகுந்தலாவின் திருமணச் செலவுக்காக வாங்கிய கடன்களைத் தீர்த்திடவும், மீதித் தொகையைத் தவணைகளில் செல்லம்மாளிடம் தருவதாகவும் ஒப்பந்தமாயிற்று.

ஏ.வி. மெய்யப்ப செட்டியார்

பாரதி பாடல்களை ஒலிப்பதிவு செய்யும் உரிமை ஸரஸ்வதி ஸ்டோர் வெளியிட்டு வந்த 'பிராட்காஸ்ட்' ரிக்கார்டுகளுக்காக 400 ரூபாய்க்கு, ஏ.வி. மெய்யப்ப செட்டியாரால் வாங்கப் பெற்றது.

1935

பாரதி நூல்களின் விற்பனையினால், செல்லம்மாள் பாரதிக்கு தக்க லாபம் எதுவும் கிடைக்கவில்லை என்றும், செல்லம்மாள் வறுமையில் வாடுவதாயும், பாரதி பிரசுரலாயம் குறித்த தவணைகளில் பணம் அனுப்பவில்லை என்றும், விவரம் தெரியாமல் நூல்களின் உரிமைகளைக் கொடுத்துவிட்டதாயும், நூல்களின் விற்பனையால் கிடைக்கும் லாபத்தில் தனக்கும் பங்கு வேண்டும் என்றும் செல்லம்மாள் பாரதி கோரிக்கை வைத்தார்.

ஆக்கூர் அனந்தாச்சாரி

கவிச் சக்கரவர்த்தி 'சுப்பிரமணிய பாரதி சரித்திரம்' எனும் நூலை எழுதியவரான (புத்தக வடிவில் வெளிவந்த முதல் பாரதி சரித்திரம் இதுவாகும்) ஆக்கூர் அனந்தாச்சாரி போன்றவர்கள் செல்லம்மாவிற்காக ஆதரவுக் குரல் கொடுத்தனர்.

1938

பாரதியின் மகள் சகுந்தலாவின் கணவர் நடராஜன். பாரதிபிரசுரலாயத்திலிருந்து விலகிக் கொண்டார்.

1941

ஹரிஹரசர்மாவும் 1941-இல் விலகிக் கொண்டார். பாரதி பிரசுராலயம் பாரதி தம்பி விசுவநாதனின் தனிப்பொறுப்புக்கு வந்தது.

1945

1945 செப்டம்பர் 11 எட்டயபுரத்தில் பாரதி மண்டப அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழ் மக்களின் உற்சாகமான ஆதரவினாலும், தமிழ் மக்கள் அளித்த நன்கொடையினாலும் எட்டையபுரத்தில் பாரதி மணிமண்டபம் கட்டப் பெற்றது. 1948-இல் வங்காள கவர்னராயிருந்த ராஜாஜி அதனை திறந்து வைத்தார்.

1949 – ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார்

பாரதி நூல்களை அரசுடைமையாக்க வேண்டுமென்ற கோரிக்கை நாளுக்கு நாள் வலுத்தது. சென்னை மாகாண முதன்மந்திரி ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார் நடவடிக்கை எடுத்தார். 1949-ஆம் ஆண்டில் பாரதி பிரசுரலாயத்திடமிருந்த பதிப்புரிமையை, சி. விசுவநாதனிடமிருந்து அரசாங்கம் விலைக்கு வாங்கியது. பாரதியின் மனைவி செல்லம்மாளுக்கு 10,000 ரூபாயும், பாரதியின் புதல்வியார் தங்கம்மாள், சகுந்தலா இருவருக்கும் தலா 5000 ரூபாயும் வழங்கப்பட்டது.

*பாரதி பாடல்களின் ஒலிப்பதிவு உரிமையை ஏ.வி. மெய்யப்ப செட்டியார் இலவசமாகவே வழங்கினார். பாரதியார் பாடல்கள் நாட்டுடமை ஆயிற்று. இதனால் பல பிரசுரத்தார்கள் பாரதி கவிதைகளுக்குத் தத்தம் பதிப்புக்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். 'இளசை' என்னும் எட்டயபுரத்தில் பிறந்த பாரதிக்கு மனைவியான செல்லம்மாள் 'வளசை' என்றழைக்கப்பட்ட கடையத்தில் 1889-இல் பிறந்தவர்; 1948-இல் உயில் எழுதியுள்ளார். செல்லம்மாள் பாரதி 1955-இல் மறைந்தார்.**

* பாரதி ஆய்வாளர் சீனி. விசுவநாதன், நூலாசிரியரிடம் 30.01.2009 தொலைபேசியில் தந்த தகவல்.

பாரதி செல்லம்மாள் உயில்...

(முதன்முறையாக அச்சில்)



செ.திவான்